**CCE PR**

ಕರ್ನಾಟಕ ಪ್ರೌಢ ಶಿಕ್ಷಣ ಪರೀಕ್ಷಾ ಮಂಡಳಿ, ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು – 560 003

**KARNATAKA SECONDARY EDUCATION EXAMINATION BOARD, MALLESWARAM, BANGALORE – 560 003**

ಎಸ್.ಎಸ್.ಎಲ್.ಸಿ. ಪರೀಕ್ಷೆ, ಜೂನ್ — 2017

**S. S. L. C. EXAMINATION, JUNE - 2017**

ಮಾದರಿ ಉತ್ತರಗಳು

**MODEL ANSWERS**

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T**

CODE NO. : **10-T**

ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

**Subject : First Language — TAMIL**

**( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )**

**(ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ Private Repeater )**

ದಿನಾಂಕ : 15. 06. 2017 ] [ ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : **125**

Date : 15. 06. 2017 ] **[ Max. Marks : 125**

**பகுதி அ**

**I. ஒரு தொடரில் விடை தருக :** **16 × 1 = 16**

1. இந்திய நாடு என்னுடைய நாடு என்ற எண்ணத்தைக் கூட வேண்டும்.
2. பிட்டுக்காக மண் சுமந்தார்.
3. தனக்கென வாழ்வோர், பிறர்க்கென வாழ்வோர்.
4. சூரியன் பொற்கிண்ணமாய்ச் சுற்றிலும் செங்கதிர்களைப் பாய்ச்ச, மேகம் கரும் புகை கக்க சூரியன் மறைந்தது.
5. கனகன், விசயன்
6. சிவனடியார்களுக்கு நல்விருந்தளிக்கும் தொண்டு செய்து வந்தார்.
7. விக்ரமார்ச்சுன விஜயம்.
8. ஒன்றுயிர்த் துணையாம் சங்கத்து உறவையெப் பொழுது காண்பேன்.
9. தன்னம்பிக்கையைச் சுட்டெரிக்கும் இலக்கியங்களையும், ஏற்பாடுகளையும் இடறிவிட வேண்டும்.
10. நாளைய பலாவை விட இன்றைய களா சிறந்தது.

11. அறிவை நோக்கமாகக் கொண்டவர்கள்.

12. துளிர் இலை மிகுந்து இருக்கும் போது

13. நூற்றுக்கணக்கான குறிப்புகளுடன்.

14. அடிகளிலும், சீர்களிலும், எழுத்துக்கள் ஒன்றி வருவது தொடை எனப்படும்.

15. மனுஷங்ககிட்டேயிருந்து பூமியைக் காப்பாத்தறது எப்படி ?

16. செய்யுளைச் சொல்லாலும், பொருளாலும் அழகு படப் புனைவது.

**II. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 16 × 2 = 32**

17. நழுவும் ஆடையைத் தயிர் பிசைந்த கைகளால் கழுவாமல் தள்ளி நெற்றி வியர்க்க புளிக்குழம்பு சமைத்தாள்.

18. C.F.C. ஓசோனுக்கு எமன். ஒரு மா க்யூல் ஒரு லட்சம் ஓசோன் மா க்யூலை அழிக்கவல்லது.

19. தொல்காப்பியர் காலத்தில் பயின்று வந்த “பிசி” என்ற சொல் காலமாற்றத்தில் பிதிர் என்றும், பின்னர் புதிர் எனவும் மாறியுள்ளது.

20. குழந்தைகள் உடலைத் தீண்டுதல் உடலுக்கு இன்பம். அவர்களின் மழலைச் சொல் செவிக்கு இன்பம்.

21. கரும்புத் துண்டை மென்று சாறை விழுங்கிவிட்டு சக்கையைத் துப்புவது போல் வெளியே தள்ளின.

22. வடபுலத்தரசர் இகழ்ந்தது தங்களை அன்று. தணிக நின் சீற்றம். தவிர்க்க இவ்வஞ்சினம்.

23. ஒரு சொல் இரண்டு முன்று முறை அடுக்கி வருவது.

வருக வருக, பாம்பு பாம்பு.

24. பெண்கள் தமிழ்நாடு முழுவதும் குலுங்கிடுமாறு கைகொட்டி கும்மியடித்தனர்.

25. இலக்கிய இன்பம் இழைந்ததாக இருக்கும். கருத்து நலம் கெழுமிய உரையாடலாக இருக்கும்.

26. துளிர்க்கும் இலை மிகுந்தும் குளிர்ச்சி நிறைந்து விளங்கும் முல்லை நிலத்தில் மகிழ்வுடன் குடத்தியரோடு சென்ற கோவலர்கள் ஏசுவின் திருவடியை வணங்குவர்.

27. இரக்கம் என்னும் ஒரு பண்பு பெண்ணின் வடிவம் பெற்றுக் கொடுமைமிக்க சிறைக்குள்ளே சிக்கிக் கொண்டது போல் இருந்தாள்.

28. மிருகங்கள், பறவைகளுக்கான கோயில் - வணங்கப்படுகின்ற தெய்வங்கள். குஜராத் வட பகுதியில் உள்ளது.

29. இனியதாயும், இயற்கையான திறமை உடையதாயும், தாழ்வெனும் தன்மை இன்றியும், வஞ்சமில்லாக் கல்வி, பொய்யில்லாப் புதுமை உடையதாயும் இருக்க வேண்டும்.

30. வீரவாள் மீது ஆணையிட்டு, பத்தினி தெய்வம் சிலை வடிக்க இமயக் கல்லை அவர் முடித்தலையில் ஏற்றுவது.

31. இரட்டைச் சொல்லாக வருவது. பிரித்தால் பொருள் தராதது.

"கடகட, மடமட, சடசட"

32. ஒன்றன் பெயர் அதனைக் குறிக்காமல் அதனோடு தொடர்புடைய வேறொன்றிற்கு ஆகி வருவது.

"காஞ்சிபுரம் வாங்கினான்"

**III. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : 11 × 3 = 33**

33. வானில் உலவும் சூரியனை கைமறைப்பார் இல்லை. அறிவுடையோரை அடாத சொற்கள் பேசி புகழை மறைக்க இயலாது.

34. வடதுருவம் - தென்துருவம் பனிக்கட்டிகள் உருகும்.

கடல் மட்டம் உயரும்.

தீவுகள், கடல் ஓரப் பகுதிகள் மூழ்கும்.

35. நிலக்கரி ஆலைகள் இயக்கும். அனல் மின்சாரம் தயாரிக்க, சாலைகள் அமைக்க உதவும். தொழிற்கூடங்கள் பெருகும்.

36. ஈற்றடி முச்சீர் ஏனைய அடிகள் நான்கு சீர்

செப்பலோசை உடையது

இறுதி அடியின் இறுதி சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்ப்பாடுகளுள் ஒன்றால் முடியும்.

*அல்லது*

குறளடி - இரண்டு சீர்கள்

சிந்தடி - மூன்று சீர்கள்

அளவடி - நான்கு சீர்கள்

நெடிலடி - ஐந்து சீர்கள்

கழிநெடிலடி - ஆறும் அதற்கு மேற்பட்ட சீர்கள்.

37. வாலை ஒட்ட நறுக்கினாலும் நாய் நன்றி காட்டும்.

பால் வார்த்தாலும் விஷம் கக்கும் பாம்பு.

கவளம் கண்டதும் கரையும் காக்கை.

38. இரு பொருள்களை முத ல் ஒப்புமைப் படுத்தி பின்னர் அவ்விரண்டு பொருளுக்கும் இடையே உள்ள வேற்றுமையைக் கூறுவது.

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினாற் சுட்ட வடு.

**இடம் சுட்டிப் பொருள் விளக்குக:**

39. இடம் : பெரியபுராணம்

விளக்கம் : கொல்லையிலே முளைக்க வைத்த பயிர்கள், குழிகளில் இருந்து மேலே கிளம்பும். பயிர்களைக் கைகளால் தடவிப் பறித்தார்.

40. இடம் : ஒரு செய்தி

விளக்கம் : வயசுக்கு வந்த பெண்கள் தீப்பெட்டி ஒட்டுகிறார்கள். அரங்கு வீட்டின் இருட்டில் வளர்க்கப்பட்ட முளைப்பாரி பயிர்கள்.

41. இடம் : நாட்டு வாழ்த்து

விளக்கம் : வந்தவர் நம் நாட்டை ஆள நாம் தூங்கிக் கிடந்தது போதும். யாரையும் நம்பி வாடியது போதும்.

42. இடம் : பெண்கள் விடுதலைக் கும்மி

விளக்கம் : பெண்கள் படித்துப் பட்டம் பெறுதல். சட்டங்கள் செய்தல், ஆணுக்கு இணையாக இருத்தல்

43. இடம் : கண்ணகி கோயில் செய்த சேரன் செங்குட்டுவன்.

விளக்கம் : தூக்குங்கள் கல்லை, தென்தமிழ் இகழ்ந்த கனகா! விசயா! எம் தமிழ்ப் பாவையைச் சுமந்து செல்லுங்கள். உம் வாய்த் துடுப்பிற்கு ஏற்ற ஒறுப்பு.

**IV. எட்டு அல்லது பத்து தொடரில் விடை தருக :** **$3 \times 4 = 12$**

44. **எங்கள் தமிழ் மொழி**

எமது தமிழ்மொழி இனிமையானது
இன்பம் தரும் அமுதம்

சுவை மிகுந்த கனிச்சாறு

வாழ்வில் உயரக் கிடைத்த பேறு

தமிழ் மொழி போல சிறந்த மொழி வேறில்லை.

அல்லது

**சீதை - குலங்கள்**

சீதை இராமனிடம் குலத்தை சிறப்பு பெறச் செய்தாள்.

தான் பிறந்த குலத்தை சிறப்பு பெறச் செய்தாள்.

இராவணனது குலத்தை கூற்றுவனுக்கு கொடுத்தாள்.

வானர குலம் புகழ் பெறச் செய்தாள்.

45. **இவர்கள் கைவண்ணம்**

பெருந்தகையர், விருப்பமான பண்டம் தயிர் வடை

மாணவியர் தயிர் வடை தயாரித்தனர்.

பேராசிரியர் சேதுப்பிள்ளை.

கம்பன் கவித் தொடரை நினைவூட்டல்.

அல்லது

**இலட்சியங்கள்**

வாழ்க்கையின் நிமிடங்கள்

இலட்சியங்களால் கௌரவிக்கப்படுதல்

இலட்சியமில்லா.த வாழ்வு ஆணியில் தொங்கும் சட்டை

கழுதையின் வாயருகே கேரட் போல் வழி நடத்துதல்.

46. **கிராமத்தின் மாலைநேரக் காட்சி**

முன்பெல்லாம் அம்மன் கோவில் மைதானத்தில் குழந்தைகள் ஓடி ஆடும். விளையாட்டு கூச்சல்கள் கேட்டுக் கொண்டே இருக்கும். இப்பொழுது இல்லை. அவர்கள் எல்லோரையும் தீப்பெட்டி ஆபீஸ்காரன் தரையோடு தரையாக அறைந்து வைத்து விட்டான். அவர்களால் முடிந்தது, தீப்பெட்டி ஒட்டுவது, பாட்டு கேட்பது.

அல்லது

**கண்ணகி கோயில்**

இக்கோயில் கல்லால் ஆனதா மரத்தால் ஆனதா!

இதைக் கல்   ல் வடித்ததென்று யாரும் கூறார்.

காண்பது கண்ணகியே

ஆயிரம் காணி மானியம் விடேன்.

**V. அடிபிறழாமல் எழுதுக :** **1 × 4 = 4**

47. **திருவாசகம்**

சோதியாய்த் தோன்றும் உருவமே அருஆம்
ஒருவனே சொல்லுதற்கு அரிய
ஆதியே நடுவே, அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தம் மாகடலே
தீதுஇலா நன்மைத் திருவருள் குன்றே
திருப் பெருந்துறை உறை சிவனே
யாதுநீ போவது ஓர்வகை அருளாய்
வந்துநின் இணை அடி தந்தே.

அல்லது

**புறநானூறு**

ஈன்றுபுறந் தருதலென்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் - காளைக்குக் கடனே.

**VI. 48. பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருதல் :** **4 × 1 = 4**

i) டாக்டர் ஜி.யு. போப்

ii) ஆல்பர்ட் சுவைட்டர்

iii) தமிழ் இலக்கியத்தில் மிகப் பெரிய சாதனை படைத்த படைப்பிலக்கியம்

iv) திருக்குறள்.

## பகுதி ஆ

**VII. சரியான விடையைத் தேர்ந்தெடுத்தெழுதுதல் :** **10 × 1 = 10**

49. (B) அகவல்

50. (C) தற்குறிப்பேற்ற அணி

51. (C) உழிஞை

52. (A) இரட்டைக்கிளவி

53. (B) வினாத் தொடர்

54. (A) நிலவு

55. (C) இடவாகு பெயர்

56. (B) மடி

57. (D) அளவடி.

58. (C) பசுமை + தமிழ்.

**VIII. தொடர்புபடுத்தி எழுதுக:** **4 × 1 = 4**

59. இணையம்

60. இயற்கையழகு

61. மருத்துவன்

62. எதுகைத் தொடை.

## பகுதி இ

**IX. 63. கடிதம் அல்லது பதாகை** **1 × 5 = 5**

தலைப்பு: எதிர்காலத் திட்டம்

- நண்பனுக்குக் கடிதம்
- எதிர்காலத் திட்டம் எழுதுதல்
- பெறுநர் எழுதுதல்
- கையொப்பமிடல்.

*அல்லது*

**பதாகை**

- கடையின் பெயர்
- நாள், இடம், பொழுது
- படங்கள்
- புத்தகங்களின் பெயர்கள்
- விலைப்பட்டியல்

**X. 64. கட்டுரை வரைதல் :** **1 × 5 = 5**

- தலைப்பிற்கேற்ற முன்னுரை
- தலைப்பை ஒட்டிய பக்கத் தலைப்புகள்
- கட்டுரையின் நோக்கம்
- நிறைவுறும் வகையில் வ யுறுத்தல்
- முடிவுரை.